<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாள் புதன் கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி.எஸ்.சங்கீதா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

<u>OS.No</u>. 115/2020 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணவேணி | வயது | : 73 |
| த.பெ | : ஜகன்நாதன் | தாலுக்கா : | |
| கிராமம் | : தற்போது சென்னை | தொழில் : | |

23.<u>04.2025 – வா.சா. 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் தரப்பிலான குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் நான் வாதி. பிரதிவாதி 1 மற்றும் 2 மைனர்கள் என்னுடைய கணவர் ஜகன்நாதன் அவர்களின் 2 ம் மனைவியின் பிள்ளைகள் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை என்னுடைய கணவின் பென்சன் தொகையை பெறுவதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் 1, 2 பிரதிவாதிகள் திருமணம் நடைபெறுவதற்கு முன்பு வரை மூன்றில் 1 பங்கும் திருமணம் ஆனபிறகு முழுதொகையும் வேண்டி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் மேலும் 3,4 பிரதிவாதிகள் எதிராக மேற்படி தொகையை கொடுக்கும்படி செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் கேட்டுள்னேன் என்றால் சரிதான். என்னுடைய கணவர் வடமாதிமங்கலத்தில் அரசு பள்ளியில் முதுநிலை ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். நான் வருவாய் துறையில் பணியாற்றினேனா என்றால் பணியாற்றினேன். சுமார் 3 1/2 வருடங்கள் பணியாற்றினேன். மேற்படி நான் 3 ½ போளூர் மற்றும் ஆரணி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியாற்றினேன் என்றால் சரிதான். மேலும் நான் ஆரணி குண்ணத்துார் மேல்நிலை பள்ளியில் 3 வருடங்கள் 10 மாதங்கள் பட்டதாரி ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றேன். எனக்கும் என் கணவருக்கும் 05.09.1982 ல் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். நானும் என் கணவரும் எத்தனை வருடங்கள் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சுமார் 15, 16 வருடங்கள் சேர்ந்து வாழ்ந்தோம். நானும் என் கணவரும் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் வேலப்பாடியில் இடம் வாங்கி இரண்டு மாடி வீட்டை கட்டினோம் என்றால் சரிதான். எனக்கும் என் கணவருக்கும் இடையே தாம்பத்யம் மூலம் குழந்தை இல்லை. குழந்தை இல்லை என்றால் எனக்கும் என் கணவருக்கும் இடையே கருத்து வேறுபாடு வந்ததால் பிரிந்து வாழ்ந்தோமா என்றால் இல்லை. கருத்து வேறுபாடு இருந்தது ஆனால் பிரிந்து வாழவில்லை. அவர் விடுமுறை நாட்களில் வேலுார் வருவார். வந்து என்னை சந்திப்பார். அவர் பணிபுரிந்த இடம் வடமாதிமங்கலம் என்பதால் தினமும் வேலுாருக்கு வந்து செல்ல முடியாது என்பதற்காக அவர் ஆலம்பூண்டி உள்ள அவர் தாய் வீட்டில் மற்ற நாட்களில் தங்கி இருப்பார்.01.04.2002 ல் என்வீட்டு சொந்தகாரர்கள் மற்றும் அவர்

வீட்டு சொந்தகார்ர்கள் இடையே பஞ்சாயத்து நடந்தது என்றால் இல்லை. மேற்படி 01.04.2002 ல் நான் கணவருக்கு ஜீவனாம்ச பத்திரமும் சம்மந்த பத்திரமும் என் கணவர் 2 ம் திருமணம் செய்வதற்காக சம்மத பத்திரமும் எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை. மேலும் வேலுர் வேலப்பாடியில் உள்ள வீட்டின் என் கணவின் பாதி பாகம் உரிமையை எனக்கு தான செட்டில்மெண்ட் மூலம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேலும் வேலப்பாடி வீடு கட்டிக்கொண்டு இருந்த சமயத்தில் என கணவர் மட்டும் தான் வேலையில் இருந்தார் என்றால் சரியல்ல. நானும் வேலையில் இருந்தேன். வேலப்பாடியில் அடிமனையை 1997 ல் வாங்கி 1999 ல் வீடு கட்டி முடித்தோம். என் கணவருக்கு 1988 ல் வேலை கிடைத்தது. அதன் பிறகு தான் மேற்படி வேலப்பாடியில் இடம் வாங்கி வீடு கட்டினோம். என் கணவர் 2010 ல் ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். என் கணவர் 01.03.2020 ல் அன்று சாலை விபத்தில் இறந்து விட்டார் என்றால் சரிதான். மேறப்டி சாலை விபத்தில் இறந்ததால் அரசாங்கம் கொடுத்த 1,00,000/-ருபாயை நான் தான் பெற்றேன் என்றால் சரிதான். 07.10.2020 ல் என்னுடைய வழக்கறிஞர் மூலம் 3,4 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். நான் 02.11.2020 அன்று வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் நவம்பர் 2020 ல் தான் தாக்கல் செய்தேன். தேதி ஞாபகமில்லை. மேலும் நான் வழக்கு தாக்கல் செய்தபிறகு 3,4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் பெற்றேனா என்றால் என் வழக்கறிஞர் மூலம் பெற்றேன். மேலும் எதிர்வழக்குரையை 3,4 பிரதிவாதிகள் என் கணவின் பணிபதிவேட்டில் மனைவி என்ற இடத்தில் 1,2 பிரதிவாதிகளின் தாயாரான இந்திராகாந்தி பேரும் பென்சன் தொகையும் அவருக்குதான் போக வேண்டும் என்று இருந்ததால் வழங்கப்பட்டது என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான், நான் தான் சட்டப்பூர்வமான மனைவி அவர்கள் சட்டத்திற்கு எதிராக பென்சன் தொகை போட முடியாது. நான் தான் என் கணவரின் சட்டப்பூர்வமான மனைவி என்பதற்கான தாவாவில் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகள் கொடுத்த எதிர்வழக்குரையில் சங்கதிகளின் படி என்னுடைய 1 மற்றும் 2 பரிகாரம் செல்லாத நிலையில் அடைந்துவிட்டது என்றால் சரியல்ல, நான் தான் அவரின் சட்டப்படியான மனைவி. எனக்கு திருமணம் நடைபெறும்போது என்னுடைய தாய், தந்தையர் உயிரோடு இருந்தார்களா என்றால் இருந்தார்கள். எனக்கு என்னுடைய அண்ணன் சுப்பிரமணியன் மற்றும் அண்ணி சசிகலா சுப்பிரமணியன் அவர்கள் தான் திருமணம் நடத்தி வைத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி இருவரும் வழக்கறிஞர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 குடும்ப அட்டையில் என் கணவர் பெயர் இல்லாமல் என் தந்தையார் பெயர் தான் உள்ளது என்றால் நான் அப்போது ஆதார் அட்டையை தாக்கல் செய்யாததால் என் கணவர் பெயர்அதில் போடவில்லை. மேற்பை வா.சா.ஆ 3 2017 ல் தான் பெற்றுள்ளேன் எனற்ால் சரிதான்.

மேலும் வா.சா.ஆ.3 குறிப்பிடப்பட்டுள்ள முகவரி என் கணவரும் நானும் சேர்ந்து தான் வேலுரில் கட்டிய வீட்டின் முகவரி என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 குறிப்பிட்டுள்ள அருள்பிரசாத், வினோத்குமார், மஞ்சளா ஆகியோர் யார் என்றால் என் தம்பி பிள்ளைகள். என் தம்பி குணசேகரன் அவர்களின் பிள்ளைகள். என் தம்பி Heart attack ல் இறந்து விட்டதால் நான் தான் 2018 ல் இருந்து அவர்களை வளர்க்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 என் கணவர் இறப்பு சான்றிதழை என் கணவரின் தந்தை, தாய் மற்றும் மனைவி பெயர்கள் விடுப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.6 நான் தான் சென்னையில் பெற்றுக்கொண்டு வந்தேன் எனற்ால் சரிதான். மேலும் வா.சா.ஆ.7 வாரிசு சான்றிதழ் நான் தான் மனு செய்து பெற்றேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஜகன்நாதன் அவர்களின் வாரிகளான கிருஷ்ணவேணி, யோகபிரியா, யோகலட்சுமி ஆகியோர்கள் வாரிசுதாரர்களாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.7 வாரிசு சான்றிதழ் பெறும்போதே என் கணவரின் பெற்றோர் உயிரோடு இல்லை என்றால் சரிதான். என் தாவா சட்டப்படி செல்லதத்தக்கதல்ல ஆகையால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

4 மற்றும் 5 பிரதிவாதிகளின் வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணையை அவர் தரப்பில் ஏற்றுக்கொள்கிறார்.

குறுக்குவிசாரணை முடிவடைந்தது.

Sd/-B.Salma,
District Munsif,
Polur